ONE TWO ACADEMY

12 - ஆம் வகுப்பு

தமிழ்

இயல் - 1

மதிப்பெண்கள்:-50 **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி
   ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ந மட்டும் சரி
   ஈ) க, ங இரண்டும் சரி
2. ..... முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள் தமிழன்னை.
   அ) சடையப்ப வள்ளல் ஆ) சீதக்காதி
   இ) பாரி ஈ) நெடுங்கிள்ளி
3. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
4. தமிழ்மொழியின் நடை அழகியல் என்னும் கட்டுரையின் ஆசிரியர்
   அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்
   இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) தமிழண்ணல்
5. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடியோனை
6. தமிழ் தோன்றிய மலை
   அ) குடகு ஆ) பொதிகை
   இ) இமயமலை ஈ) விந்தியமலை
7. எழுதும்போது வரும் பிழைகளை ..... வகையாகக் கொள்ளலாம்.
   அ) 3 ஆ) 4
   இ) 5 ஈ) 6

8. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

9. நெல்லையப்பர் எதனைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறினார்?
அ) பெற்றோரைக் காப்பதை ஆ) விடுதலைக்குப் போராடுவதை
இ) தமிழ் வளர்ப்பதை ஈ) சமூக இழிவை களைவதை

10. தமிழ்நாட்டில் வீதி தோறும் இருக்க வேண்டியது எது எனப் பாரதியார் விரும்புகிறார்
அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை
இ) பள்ளிக்கூடம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 8 X 2 = 16

11. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?

12. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

13. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

14. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

15. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக"- இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

16. தண்டியலங்காரம் - சிறுகுறிப்பு தருக.

17. புணர்ச்சி விதி தருக. **செம்பரிதி**

18.**தமிழாக்கம் தருக.**

அ) Learning is a treasure that will follow its owner everywhere.

ஆ) A new language is a new life.

19.**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

தாமரை இலை நீர் போல

20.கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூற்களில் சிலவற்றை எழுதுக.

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21.சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

22.'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

23.'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

24.கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

25.தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

26.'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.

27.பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.